முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

இ.ம.எண்.26/2018 எண்.
நி.ம.எண்.27/2017
ம.சா.3 – ராமசாமி

03.10.2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

வாடகைக்காக கட்டிடங்களை பேசி விடும் தரகர் வேலை பார்ப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுச் சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மனுதாரரும் எதிர்மனுதாரரும் மனுச் சொத்தை பொறுத்து வாடகை ஒப்பந்தம் எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக் கொண்டார்கள். எந்த மாதம், எந்த வருடம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் வாடகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்ற விவரங்களை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஞாபகமில்லை என்று சொல்லி உள்ளேன். முதல் விசாரணை சங்கதிகள் அனைத்தும் மனுவிற்காக மனுதாரர் சொல்லி தயார் செய்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே வாடகைக்கு மனுச் சொத்தைதே பேசி முடித்ததாகச் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.